**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.35/2024 - PW-12**

| | |
|---|---|
| Name | திரு. பன்னீர் செல்வம் |
| Husband/Father Name | அருணாச்சலம் |
| Village /Area | முருங்கை |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | விவசாயம் |
| Age | 27 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 03.09.2025.

**(எதிரிகள் ஆஜர்.).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். அசா.11 பாலகிருஷ்ணன் எனது சித்தப்பா. இறந்த சந்தானம் எனது ஊர்காரர். கடந்த 2019-ம் ஆண்டு சந்தானம் என்பவரை சவீதா மருத்துவமனைக்கு காரில் அழைத்து சென்று அனுமதித்தேன். அன்றைய தினம் எங்கள் ஊரில் மாரியம்மன் கோவில் திருவிழா நடைபெற்றது காயம் பட்ட சந்தானத்தை எங்கள் ஊரை சேரந்த ஆனந்தனின் வீட்டு திண்ணையில் படுக்க வைத்திருந்தார்கள். பூந்தமல்லியில் உள்ள சவீதா மருத்துவமனைக்கு அழைத்த சென்ற போது அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் சந்தானம் இறந்து விட்டதாக தெரிவித்தார்கள். ஆஜர் எதிரிகள் எங்கள் ஊர்காரர்கள். சந்தானத்தை ஏற்றி சென்ற ஸ்விப்ட் டிசயர் காரை நான் தான் ஓட்டி சென்றேன். என்னுடன் ஜீவா மற்றும் ஆனந்தன் மருத்துவமனைக்கு வந்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள முதல்

சாட்சி கையொப்பங்கள் என்னுடயது இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள முதல் சாட்சி கையொப்பங்கள் என்னுடையது இல்லை. மருத்தவர் சந்தானம் இறந்துவிட்டதாக கூறியதன் அடிப்படையில் அவரை ஏற்றிக்கொண்டு ஊருக்கு வந்துவிட்டேன். சந்தானத்திற்கு எப்படி காயங்கள் ஏற்பட்டது எவ்வாறு இறந்தார் என்பதை பற்றி எனக்கு தெரியது.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

19.04.2019 அன்று மாலை 05.00 மணிக்கு தக்கோலம் பழையண்டி அம்மன் கோவில் அருகே நானும் எங்கள் ஊரை சேர்ந்த பாலகிருஷ்ணன் த/பெ. நாரயணன் என்பவரும் இருந்த போது அரக்கோணம் தாலுக்கா காவல் ஆய்வாளர் எங்களிடம் சந்தானம் கொலை வழக்கு சம்பந்தமாக சரவணண் த/பெ.கோபால், ரமேஷ் த/பெ. நடராஜ், மணிகண்டன் ஆகியோர்களை கைது செய்து விசாரித்து கொண்டிருந்ததாவும், அப்போது மேற்படி எதிரிகள் தாமாக முன்வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டு தன்னிச்சையாக தனித்தனியே ஒப்புதல் வாக்குமூலங்கள் கொடுத்ததகாவும் அதனை போலீசார் என் முன்னிலையிலும் பாலகிருஷ்ணன் முன்னிலையிலும் மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை பிரிண்ட் எடுத்து என்னிடமும் பாலகிருஷ்ணணிடமும் சாட்சி கையொப்பங்களை பெற்றதாகவும், மேற்படி எதிரிகள் ரமேஷ் மற்றும் மணிகண்டன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் எதிரிகளுடன் நாங்களும் போலீசாருடன் சென்ற போது அவர்கள் மறைத்து வைத்திருந்த சந்தானத்தை கொலை செய்ய பயன்படுத்திய கற்களை ஆஜர் செய்வதாக கூறியதன் அடிப்படையில் 19.04.2019 சேகர்

வீட்டின் அருகே அழைத்து சென்ற போது அங்கு அவர்கள் கொலை செய்ய பயன்படுத்திய கற்களை எடுத்து ஆஜர் செய்ததாகவும் அவைகளை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிக்கொண்டதாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u> இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.03 17:36:53 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.